# நாளின் இறுதியிலென்ன நடக்கிறது?

## I. அறிமுகம்

"பேனாவின் நோக்கம் என்ன?" என்று நான் உங்களைக் கேட்டால், "எழுதுவது" என்பதே உங்களது பதிலாக அமையும். "அப்படி ஒரு பேனா எழுதாவிட்டால் அதை நான் என்ன செய்யவேண்டும்?" என்று நான் மேலும் உங்களைக் கேட்டால், "அதைக் குப்பையில் எறிந்துவிடு" என்பதே நிச்சயமாக உங்களது பதிலாக அமையும்.

மதமும் அப்படித்தான். "மதத்தின் நோக்கம் என்ன?" என்று நான் மனிதரைக் கேட்டால், "மன நிம்மதி பெற", "நான் இறந்ததும் பரலோகம் செல்வேன் என்பதை உறுதிசெய்ய" என்ற பதில்களையே அவர்கள் வழக்கமாகக் கூறுவார்கள்.
பெரும்பாலான மதங்கள் நாம் பரலோகம் செல்லவேண்டுமானால் நான் நன்மை செய்யவேண்டும் என்றே போதிக்கின்றன. இது உண்மையானால், அந்தப் பொறுப்பு நம்மையே சேரும். அதாவது, நாம் பரலோகம் சென்றடைய தவறினால் அது நமது தவறாகும், ஆயினும் நாம் எவ்வளவு சிறந்த நன்மை செய்தாலும் நாம் பரலோகம் செல்வோம் என்ற நிச்சயம் இல்லை. ஏனெனில் **"எவ்வளவு நன்மை போதுமான நன்மையாகும்?"** என்ற கேள்விக்கு பதில் இல்லை. "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது" (ஏசாயா 64:60) என்று வேதாகமம் கூறுகிறது. அதாவது நாம் போதுமான நன்மைகளை செய்வது முடியாதகாரியமாகும்.
அதோடு, நாம் நமக்கு உறுதி அளிக்கும் பதில்களைத் தேடும்போது நமது நித்திய திட்டத்தைப் பற்றிய வாக்குறுதிகளை அளிப்பவர் மற்றும் அதை நிறைவேற்றகூடியவர் யார் என்பதை நாம் உறுதிசெய்வது அவசியமாகும்.

## II. நித்திய ஆண்டவர் ஒருவரே நித்திய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும்.

சாதரணமான மனிதர் ஒருவராலும் நித்திய வாக்குறுதிகளை செய்து அவற்றை நிறைவேற்ற முடியாது. ஆனால் ஆண்டவர் யார் என்பதை நாம் எவ்வாறு கண்டுகொள்ள முடியும்? பின்வரும் எடுத்துக்காட்டை நாம் பார்ப்போமாக:



**நெருப்பு பரிசோதனை**

எரியும் தீக்குச்சி ஒன்றை ஒரு குவளை தண்ணீருக்குள் போட்டால், நெருப்பு அணைந்துவிடும்.



ஆனால் எரியும் தீக்குச்சியை ஒரு குவளை பெட்ரொலுக்குள் போட்டால் அது வெடித்து விடும். இதன் மூலமாக நம்மால் நீரையும் பெட்ரோலையும் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது.
**அது போலவே, நாம் எவ்வாறுமனிதனிடமிருந்து ஆண்டவரைவேறுபடுத்திக்கொள்ள முடியும்?**

**சாவின் பரிசோதனை**

மனிதன் சாகக்கூடியவன். ஆனால் ஆண்டவர் சாகாதவர், அவர் நித்திய காலமாக வாழ்பவர். வேதாகமம் இவ்வாறு கூறுகிறது,

- யோவான் 1:1, "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது."
- யோவான் 1:14, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியதினாலும் நிறைந்தவராய், நமக்குள் வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையை கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.
- யோவான் 1:18, "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலுருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்."

## III. இயேசு தம்மை ஆண்டவர் எவ்வாறு கூறினார்

- யோவான் 10:30, "நானும் பிதாவும் ஒன்றா யிருக்கிறோம்"
- யோவான் 14:9, "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"
- யோவான் 11:25,26 "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்"

இது உண்மையானால் ஆண்டவரைக் கண்டடைய நமக்கு உதவி செய்வதற்கு இயெசு ஒருவரை தவிர வேறொருவருக்கும்

தகுதியில்லை! மனிதரால் தம்மை ஆண்டவர் என்று நிச்சயாமாகக் கூறிக்கொள்ள முடியும் என்று நீங்கள் சொல்லலாம்.
எனவே அடுதத கேள்வி இவ்வாறு அமைகிறது:

## IV. இயேசு தாம் கூறியவற்றிற்கு சான்றுகள் அளித்தாரா?

ஆம் நிச்சயமாக! வாழ்வின் மேலும் மரணத்தின் மேலும் அதிகாரம் கொண்டிருப்பது ஆண்டவரின் குணங்களில் ஒன்றாகும்.

• லாசரு என்ற பெயர்கொண்ட மனிதரை மரணத்திலிருந்து எழுப்பினார் (யோவான் 11:40-46), யாவிரு மகளை மரணதிலுருந்து எழுப்பினார் (மத்தேயு 9:18-25), ஒரு விதவையின் மகனை மரணத்திலிருந்து எழுப்பினார் (லூக்கா 7:11-15) என்று வேதாகமம் சொல்கிறது.

•இயேசு கிறிஸ்துவின் வாழ்வையும் அவர் செய்த அற்புதங்களையும் நீங்கள் படிக்கும்போது, அவர் நோய்கள், இயற்கை, பிசாசுகள் மேலும் அதிகாரத்தை வெளிப்படுத்தினார் என்பதை நீங்கள் காணலாம். (லூக்கா 17:11-19, மத்தேயு 8:23-27, லூககா 4:33-37)

## V. இயேசு தாமே மரணத்தை வென்றார்

வெளிபடுத்தல் 1:18 வசனத்தில் இயேசு இவ்வாறு கூறினார்
"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்"- இது ஒரு பிரதான அற்புதம். அவர் மரணத்திலிருந்து எழுந்தபோது, அவர் பாவத்தையும் மரணத்தையும் வென்று விட்டார் என்பதை நிரூபித்தார்.
இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய முழு விவரத்தை அறிய யோவான் எழுதிய சுவிசேஷத்தில் 20,21 ஆகிய அதிகாரங்களை படிக்கவும்.

ஒரு மனிதர் தம்மை ஆண்டவர் என்று கூறி தாம் மரித்த பிறகு மீண்டும் உயிரோடு வரவில்லை என்றால் அவர் வெறுமையான வாக்குறுதிகளைச் செய்தவராகவே கருத்தப்படும்.
ரோமர் 1:14 "பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்."

தாம் ஆண்டவர் என்று இயேசு கூறியதை பரிசோதனை நிரூபிக்கிறது
மரித்த மனிதர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. எனவே, அடுத்த கேள்வி இவ்வாறு அமைகிறது:

2 கொரிந்தியர் 1:19-20, "தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றெ இருக்கிறார். எங்களால் தேவனுக்கு மகிமையுண்டகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம்
இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே."
ஒரு முறை, "என் பாவங்களை மன்னித்து என்னை பரலோகத்திற்கு எடுத்துச்செல்பவர் யார்?" என்ற கேள்வி என்னை நானே கேட்டுக்கொண்டேன். அதற்குப் பதில் இயேசு கிறிஸ்துவிடமே காணமுடியும். எனது பாவங்களின் தண்டனைக்கான விலையைச் செலுத்தும்படி அவரே நான் மரிக்க வேண்டிய இடத்தில் மரித்தார், (1 கொரிந்தியர் 15:3-6).

நான் அவரை எனது இரட்சகராகவும் கர்த்தராகாவும் ஏற்றுக்கொண்டதிலிருந்து, எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றும் ஆண்டவரின் வாக்குறுதிகளின்படி ஆண்டவரோடு நான் ஒப்புரவாக்கப்பட்டேன் என்றும் எனக்கு நித்தியஜீவன் உண்டு என்றும் எனக்கு உறுதி உள்ளது. "கிறிஸ்துவை நான் எப்படி ஏற்றுக்கொள்வது?" என்று நீங்கள் கேட்டால் தயவுசெய்து பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

**மேலும் விவரங்களுக்கு 65-82603528 என்ற எண்ணில் N.சங்கரன் என்பவரைத் தொடர்பு கொள்ளவும்.**
**மின் அஞ்சல்: nedungat@gmail.com**
**or** www.amazingdiscovery.net